checklist No: 7.3

(122)

கயத்தார் ஊராட்சி ஒன்றியம், செட்டிகுறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கை

முன்னிலை திருமதி.கி.முத்துலட்சுமி

செட்டிகுறிச்சி ஊராட்சி மன்றம் கயத்தார் ஒன்றியம்

ம.பி.எண். 01/2023-2024 நாள் : 30-01-2024

பொருள் : மனைப்பிரிவு வரன்முறை தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டம், செட்டிகுறிச்சி ஊராட்சி, செட்டிகுறிச்சி கிராமம் - சர்வே எண்கள் 237/12, 237/14, 237/16 ல் (2.24 ஏக்கர்) 9050.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனை எண் 1 முதல் 44-ஐ வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

1. அரசாணை (நிலை) எண் 138, 79, 141 மற்றும் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள் : 04-06-2004,04-05-2017,23-09-2020.

2. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் : 19799/2020 போ, நாள் : 24-12-2020.

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,தூத்துக்குடி அவர்களின் ந.க.எண் :01/2024 தூ மாஅ 2, நாள் : 03-01-2024

4. திரு.K.செந்தூர்பாண்டியன், 4/610A, நடுத்தெரு, தெற்கு கோனார் கோட்டை, செட்டிகுறிச்சி கிராமம், கயத்தார் வட்டம், தூத்துக்குடி மாவட்டம் - 628552. அவர்களின் விண்ணப்ப நாள் : 07-09-2023.

*****

உத்தரவு :-

பார்வை 3 ல் கண்ட கடிதத்தின் வழி தூத்துக்குடி மாவட்டம் - கயத்தார் வட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றியம் மற்றும் செட்டிகுறிச்சி ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்கள் 237/12, 237/14, 237/16 ல் (2.24 ஏக்கர்) 9050 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு (மனை எண் 1 முதல் 44 வரை) சிறப்பு நிபந்தனையுடன் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மேற்கண்ட சர்வே எண்ணில் அமைந்துள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1. கூராய்வு கட்டணம் ரூ. 44,000/- (நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) 44 மனைகளுக்கு செட்டிகுறிச்சி ஊராட்சி பல்வகை ரசீது எண் : 00084 நாள் :30-01-2024 அன்று செலுத்தப்பட்டது.

2. சந்தை மதிப்பில் 3 சதவீதம் நிலப் பயன் மாற்றுக் கட்டணம் 13,500/- (பதிமூன்றாயரத்தி ஐநூறு மட்டும்) செலுத்துச்சீட்டு எண் : 20240109029676 தேதி : 09-01-2024 அன்று பாரத மாநில வங்கி கோவில்பட்டி கிளையில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

3. பார்வை 8 ல் கண்டுள்ளவாறு அரசுக்கு செலுத்த வேண்டிய நன்னிலை வரி ரூ. 14,400/- (பதினான்காயிரத்தி நானூறு மட்டும்) அரசு கணக்கில் 30-12-2023 அன்று உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

4. அரசு வழிகாட்டி மதிப்பு தொகையில் OSR பரப்பளவு (281.635 ச.மீ) க்கான தொகை ரூ. 13,090/- (பதிமூன்றாயிரத்தி தொன்னூறு மட்டும்). அரசு கணக்கில் நாள் 26-12-2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

உரிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டு விட்டபடியால் தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டம், செட்டிகுறிச்சி ஊராட்சி / கிராமம் - சர்வே எண்கள் 237/12, 237/14, 237/16 ல் (2.24 ஏக்கர்) 9050 ச.மீ பரப்பளவில் அமையும் புதிய குடியிருப்பு மனைப்பிரிவில், உள்ள 1 முதல் 44 வரையிலான மனைகளுக்கு சிறப்பு நிபந்தனையுடன் அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளில் கட்டிடம் கட்ட தனியாக கட்டிட வரைபட அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பார்வை 2 மற்றும் 3ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்தும் இப்புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பொருந்தும்.

செட்டிகுறிச்சி ஊராட்சி மன்றம் கயத்தார் ஒன்றியம்

ஊராட்சி மன்றத் தலைவர்
செட்டிகுறிச்சி கிராமம்

பெறுநர் :

செந்தூர்பாண்டியன்,
4/610A, நடுத்தெரு, தெற்கு கோனார் கோட்டை,
செட்டிகுறிச்சி கிராமம், கயத்தார் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம் - 628552.

நகல் :-

1. சார்பதிவாளர் கயத்தார் சார்பதிவகம்
2. இருப்புக்கோப்பு.